The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XV. No. 2

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1961 S'aka 1883

Annual Subscription Rs. 4.

The following back numbers of the Journal of The Tanjore Sarasvati Mahal Library, are available for sale :—

Vol.	IX.	Parts I, II & III.	Price Rs	2/-
,,	X.	,,	...	4/-
,,	XI.	,,	...	4/-
,,	XII.	,,	...	4/-
,,	XIII.	,,	...	4/-
,,	XIV.	,,	...	4/-

(Postage Extra)

As only a very few copies are available, book your orders early.

Copies can be had of :—

The Honorary Secretary,

T. M. S. S. M. Library, Tanjore.

(Madras State)

The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XV. **No. 2**

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1961 S'aka 1883

Annual Subscription Rs. 4.

ൾ

CONTENTS.

No.		Pages.
1.	Editorial	
2.	निघण्टुसमुच्चयः — Sri P. V. Varadarāja S'arma M. A.,	25—28
3.	सूक्तिमालिका - श्रीनारोजीपण्डितविरचिता द्राविडानुवादेन सहिता ஸ்ரீநாரோஜீ பண்டிதரால் இயற்றப்பட்ட ஸூக்திமாலிகை தமிழ் மொழிபெயர்ப்புடன் -- நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்	57—60
4.	தன்வந்தரி வைத்யம் – Dr. S. Veṅkaṭarājan, L. I. M.,	153—176
5.	वैयाकरणसिद्धान्तकौमुदी - भट्टोजीदीक्षितकृता An Analysis in English by late P. V. Nāganātha S'āstri (continued from Vol. XV. No. 1) —Sri N. S. Dēvanāthāchāriar	179—182
6.	आपस्तम्बस्मार्तप्रयोगः —Sri S. Sundarēs'a Sastri and Sri V. Sundara Sarma	25—28
7.	மதிப்புரை	1—4
8.	Our Exchanges	2

THE JOURNAL OF
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

VOL. XV. A. C. 1961 Śaka 1883 No. 2

EDITORIAL

We have published in this issue of our Journal only the serial articles in as much as we have had to reduce the number of pages. The next issue will contain the usual features. The serials are :—

1. Hanuman Nighantu.
2. Sūktimālika of Naroji Pandit with Tamil translation.
3. Āpasthambasmārtha Prayōga.
4. Siddhāntakaumudi – an analysis in English by late Sri P. V. Nāganātha Sāstri and
5. Dhanvantri Vaidyam.

We have in prior issues commented on the above works and it is not necessary to add to them. We have no doubt that these serials are found useful by the learned public.

S. GOPALAN,
Editor.

घृतकोशातकी योग्या सारसारा तुषारजा।
कारवल्ली कृमिघ्ना स्याद्बृहत्कर्कोटकोऽबलः॥ ३३॥

अल्पाहश्शकुटः कारः कारलिः परिकीर्तितः।
तुम्ब्यलाबूः पिण्डफला दीर्घतुम्बी तु दुग्धदा॥ ३४॥

गोप्रिया तु गृहव्यापि तत्फले तु जलेशयम्।
गोतुम्बी तु गवाक्षी स्याद्दोष्ठी रक्ता तु बिम्बिका॥ ३५॥

रसा चानन्दिनी द्राक्षा गोस्तनी रसपूरका।
वार्ताकी प्रसहा क्षुद्रवार्ताकी दुष्प्रधर्षणी॥ ३६॥

निदिग्धिका कण्टकारी बृहती बहुबीजकः।
मारिषो जवशाकस्स्यात्काण्डमारीप ओलकः॥ ३७॥

राजशाको राजगिरिः काण्डशाकः प्रकीर्तितः।
देवमारीषको रक्तो मेघनादोल्पमारिषः॥ ३८॥

चक्रवर्ती तु रुचिरा चक्रपत्ता जलप्रिया।
शुकशाकः पशुपति श्चिश्चलामरटीति च॥ ३९॥

झिल्यां बाष्पश्शाकिनी च करवन्दा महत्यसौ।
नानाजातीयशाकानां शाकी प्रोक्ता समाहृतिः॥ ४०॥

इति हनुमदीये भूम्यधिकारस्तृतीयस्तरङ्गः॥

॥ चतुर्थस्तरङ्गः॥

सिंहः पञ्चाननो गन्धिः पारीन्द्रो मृगयूथपः।
व्याघ्रश्शार्दूलकश्चन्द्रश्चन्द्रकीत्यभिधीयते॥ १॥

अच्छभल्लस्तु भल्लाटो वराहः स्याज्जलप्रियः।
खड्गस्तु गण्डकी खड्गी महिषो गद्गदस्वरः॥ २॥

शाखामृगो महावेगःश्विङ्कोसौ लोहिताननः ।
गोलाङ्गूलोऽसितास्यः स्याद्रोमायुर्मृगधूर्तकः ॥ ३ ॥

कौलेयको गृहमृगः कृतज्ञो रात्रिजागरः ।
शशस्तु मृदुरोमा स्यादोतुर्मर्कश्च मण्डली ॥ ४ ॥

गौर्माहेयी शुभाघ्र्या सा बहुक्षीरा तु वञ्जुला ।
समांसमीना सा गौर्या प्रतिवर्षं प्रसूयते ॥ ५ ॥

चिरसूता बष्कयणी घृष्टिस्सूतवती सकृत् ।
पक्षी पत्ररथः पत्री शुको नीडोद्भवोऽपि च ॥ ६ ॥

हंसो मरालो नीलाक्षः कार्तस्वरगरुत्तथा ।
शुकस्त्रियां तु मेधावी श्रीमान्नासीफलाशनः ॥ ७ ॥

रजको वक्रनासश्च धीमान् धीर इतीर्यते ।
ताम्राक्षः स्यादन्यभृतो वसन्तागमवाक्कविः ॥ ८ ॥

शुक्लापाङ्गश्शिखी केकी शिखण्डी चित्रपत्रकः ।
वाताकविः स्वर्णपक्षः रक्तचञ्चुर्वनप्रियः ॥ ९ ॥

कृष्णपत्रो दीर्घचञ्चुः कलहप्रिय इत्यपि ।
चित्रपुच्छस्स्वयंद्वेषी विकिरिः परिकीर्तितः ॥ १० ॥

जीवपुष्पं तु तत्पुच्छे दाक्षिणात्यो वनप्रियः ।
सह्यजश्चोलसंभूतो वनभूषणमीरितम् ॥ ११ ॥

द्रोणोद्भवस्तीक्ष्णपक्षो मृद्रासो झल्लरीस्वनः ।
चकोरो वालुकी जीवी जीवितांगारकाशनः ॥ १२ ॥

नीलकण्ठस्तु धूम्राक्षश्चाटकेर इति स्मृतः ।
भृङ्गो भ्रमश्च भ्रमरो भसलः पुष्पलोलुपः ॥ १३ ॥

इति हनुमदीये सिंहाधिकारश्चतुर्थस्तरङ्गः ॥

॥ पञ्चमस्तरङ्गः ॥

मनुष्या मनुजा मर्त्या द्विपादो नहुषो नरः।
ब्रह्मक्षत्रियविट्छूद्रा इति वर्णचतुष्टये ॥ १ ॥

ब्राह्मणो मुखजो विप्रो भूदेवो वाडवोग्रजः ॥ २ ॥

वेदगर्भो मन्त्रगर्भगीर्वाणो वेदविक्रमः।
क्षत्रियो वसुधाशक्रो वाहुजो राजवंशजः ॥ ३ ॥

तद्भेदे राहुतश्च स्याद्दुनेदारस्तु भूपतिः।
विद्वान् सन् कोविदस्सूरिर्मेधावी पण्डितो बुधः ॥ ४ ॥

सुधीर्विपश्चित्संख्यावान् प्राज्ञो धीमान्विचक्षणः।
दीर्घदर्शी दूरदर्शी लब्धवर्णफलं हविः ॥ ५ ॥

वैश्यो भूमिस्पृशोरव्यो महीभृल्लाङ्गलायुधः।
तुलाधारो भैरकश्च वर्तको वृत्तिजीवनः ॥ ६ ॥

शूद्रोऽन्त्यवर्णो वृषलो द्विजपोतो जघन्यजः।
पज्जो राणमनुजास्पृश्या आभीरूरिति कथ्यते ॥ ७ ॥

मालकः पञ्चमो मारः परांसुः (परासु) पशुभक्षकः।
अवर्णोऽन्त्यजनो दूरो हिंसारुः परिकीर्तितः ॥ ८ ॥

पाश्चात्या यवना नीचास्तुरुष्का अपि हिन्दुकाः।
म्लेच्छास्तु वाह्लिकाः कीर्णा अजात्यास्तु प्रकीर्तिताः ॥ ९ ॥

इति हनुमदीये मनुष्याधिकारः पञ्चमस्तरङ्गः ॥

समाप्तश्चायं हनुमन्निघण्टुः ॥

॥ षडर्थनिर्णयनिघण्टुः ॥

अब्जे मोक्षे जले क्षीरे सिंहे स्वर्येऽपि चामृतम् ।
आकाशे त्रिदिवे त्यागे ध्याने स्वीये च निर्णये ॥ १ ॥

स्वर्गः प्रकीर्तितश्चाथ वज्रस्तु परिकीर्तितः ।
जले शल्ये नाकलोके सायकेऽप्यायुधे मणौ ॥ २ ॥

श्रीवर्णः पङ्कजे पत्ररथे विष्णौ शिवे सिते ।
गजे चाथ महाश्वे च विशालेऽप्यर्थकामयोः ॥ ३ ॥

कृपायां रक्षणे चापि करुणा परिकीर्तिता ।
लक्षणे च प्रबन्धे च भाषायामखिलेऽपि च ॥ ४ ॥

शाश्वते पक्षिभेदे च संस्कृतः परिकीर्तितः ।
रोदने च ध्वनौ भीतौ याच्ञायामश्वपक्षिणोः ॥ ५ ॥

आक्रन्दनमिति प्रोक्तमर्थस्तु धनरुक्मयोः ।
अभिप्राये धर्ममार्गे सत्कृत्येप्यधिकेऽपि च ॥ ६ ॥

योगो भाग्येप्युपाये च चारे युद्धे च मूकके ।
चित्तवृत्तौ च भोगस्तु सर्पदेहे सुखेपि च ॥ ७ ॥

कीर्त्यार्जिते च मत्स्ये च तपस्सिद्धौ गृहेऽपि च ।
खगो बाणे याचके च चन्द्रे सूर्येऽण्डजे सुरे ॥ ८ ॥

अजो महेश्वरे विष्णौ चतुरास्येऽप्यथांबरे ।
अन्तरात्मनि मेषे स्यादब्जश्शङ्खे गुणेऽपि च ॥ ९ ॥

चन्द्रे विटेम्बुजे चापि कर्पूरेथ घृतं जले ।
आज्ये क्षीरे गुग्गुले च लोहे रक्तेऽपि कथ्यते ॥ १० ॥

सत्यं प्रमाणे तथ्ये च बले सत्वगुणेऽपि च ।
परब्रह्मणि लोके च गोविन्दो वृषभेऽपि च ॥ ११ ॥

अहितं नैव चिन्त्यन्तु केनापि ह्युपकारिणाम् ।
श्वा तु प्राप्तः शरभतां पुनः प्राप्तः स्विकां तनुम् ॥ २१८ ॥

अवमानो न कर्तव्यो ब्राह्मणस्य कदाचन ।
अवमानादगस्त्यस्य नहुषः प्राप सर्पताम् ॥ २१९ ॥

आत्मस्तोत्रं न कर्तव्यं कृतं चेल्लघुतामियात् ।
आत्मप्रशंसां कृत्वा तु ययातिः स्वर्गतश्च्युतः ॥ २२० ॥

सतामनुस्मृतिः कार्या वस्तव्यं तैस्सदा नृभिः ।
स्वर्गाच्च्युतो ययातिस्तु दौहित्रैस्तारितः पुनः ॥ २२१ ॥

जनकादधिकः पुत्रो जायते गुणकर्मतः ।
कुंभोद्भवो मुनिः सर्वं सागरं पीतवान् क्षणात् ॥ २२२ ॥

செய்யாமல் விசுவாமித்திரரைத் தன் அதிதியாக ஏற்றுக்கொண்ட வஸிஷ்ட முனிவர் பெரிதும் துக்கமடைந்தார். (உகஎ)

உபகாரம் செய்தவருக்குத் தீங்கு நினைப்பது யாருக்கும் துன்பத்தையே தரும். ஒரு முனிவரின் அருளால் ஒரு நாய் "சரபம்" என்னும் மிக்க பலமுள்ள மிருகமாக மாறிற்று. அது அம்முனிவரையே கொல்லப்பார்த்தது. உடனே பழையபடி நாயாகவே அதைச் செய்துவிட்டார் அவர். (உகஅ)

அந்தணர்களுக்கு ஒருபோதும் அவமானம் பண்ணிவைக்கக்கூடாது. நஹுஷன் என்னும் அரசன் தேவேந்திரப் பட்டத்தையடைந்துவிட்ட கர்வத்தினால் அகத்திய முனிவரை அவமதித்து அதன் பயனாகப் பாம்பு இனத்தில் பிறந்தான். (உககூ)

தன்னைத்தானே புகழ்ந்துகொள்வது தகாது. தற்புகழ்ச்சியினால் ஒருவன் இலகுவாகிவிடுவான் (ஸாரமில்லாதவனாகிவிடுவான்). சுவர்கத்திற்குச்சென்ற யயாதி என்னும் அரசன், தற்புகழ்ச்சி செய்துகொண்டதனால் வீழ்ச்சியுற்றான்.

நல்லோர்களை எக்காலமும் நினைக்கவேண்டும். எப்பொழுதும் அவர்களுடனே வசித்தலும் வேண்டும். சுவர்கத்திலிருந்து வீழ்ந்த யயாதி, புண்ணியவான்களான தனது பெண்வயிற்றுப் பேரன்களால் துயரத்தைக் கடந்தான். (உஉக)

சில சந்தர்பங்களில் தகப்பனைக்காட்டிலும் குணங்களினாலும் செயல்களினாலும் தனயனே சிறந்தவனாகிவிடுகின்றான். அகத்திய முனிவர் குடத்தில் பிறந்தவர். கடல் முழுவதையும் குடித்துவிட்டார் ஒரே நொடியில். குடத்தால் இதைச் செய்யமுடியுமா? (உஉஉ)

सीमन्तिनीषु काचित्तु जायते कुलनन्दिनी ।
सावित्र्या तारितं साध्व्या पितृभर्तृकुलद्वयम् ॥ २२३ ॥

कुले कश्चित्पुमान् श्लाघ्यो जायते कुलनन्दनः ।
भगीरथेन यत्नात्तु तारिताः सगरात्मजाः ॥ २२४ ॥

प्रबलन्तु रिपुं हत्वा ख्यातिं याति महान् सदा ।
इन्द्रो वृत्रासुरं हत्वा संप्राप्तस्तु महेन्द्रताम् ॥ २२५ ॥

अथ दशावताराः ॥

मत्स्यस्य —

दुष्टेन यद्धृतं वस्तु बलाद्ग्राह्यं सता ततः ।
शंखासुरहृता वेदाः मत्स्येन पुनराहृताः ॥ २२६ ॥

कूर्मस्य —

महाभारो हि महता धार्यते लीलया सदा ।

பெண் மக்களிலும் சிலர் குலத்தைச் சிறப்புறச்செய்கின்றனர். பதிவிரதா சிரோமணியான ஸாவித்திரியினால், தான் பிறந்த குலமும் தனது கணவனுடைய குலமும் உயர்த்தப்பட்டது. (௨௨௩)

ஒவ்வொரு குடியில் தன் குலத்தையே மகிழ்விக்கும் ஆற்றல் பெற்ற மகன் தோன்றுகின்றான். பகீரதன் என்பவன் தனது முன்னோர்களான ஸகர புத்திரர்களைப் பெரும் முயற்சி செய்து நற்கதியடையச் செய்தான். (௨௨௪)

மகாபுருஷன் எப்பொழுதும் பலம் மிகுந்த பகைவனைக்கொன்று புகழ் பெறுகின்றான். இந்திரன் விருத்திராசுரனைக்கொன்றான். அதனால் மஹேந்திரன் ஆகிவிட்டான். (௨௨௫)

(திருமாலின்) பத்து அவதாரங்கள்.

மச்சாவதாரத்திற்கு:—

தீயவனால் ஒரு பொருள் பறிக்கப்பட்டால், நன்மக்கள் பலாத்காரமாக அதைத் திரும்பப்பெறல் வேண்டும். சங்காஸுரனால் பறிக்கப்பட்ட வேதங்கள் மச்சாவதாரங்கொண்ட திருமாலால் மீட்கப்பட்டன. (௨௨௬)

கூர்மாவதாரத்திற்கு:—

மஹான்கள் பெரும்பாரத்தையும்கூட ஆயாஸமின்றிக்கே விளையாட்டாகத்

कूर्मेण मन्दरगिरिर्धृतः क्षीराब्धिमंथने ॥ २२७ ॥

वराहस्य —

निमग्नं सज्जनं यत्नात् उद्धर्तुं हि महान् क्षमः ।
क्षमा मग्ना जलनिधौ वराहेणोद्धृता बलात् ॥ ॥ २२८ ॥

नरसिंहस्य —

चराचरेषु सर्वेषु व्याप्य विष्णुस्तु तिष्ठति ।
प्रह्लादरक्षणार्थं हि स्तंभाज्जातो नृकेसरी ॥ २२९ ॥

वामनस्य —

पराक्रमः स्वतस्सिद्धो वयस्तत्र न कारणम् ।
बालेन विष्णुना क्रान्ता त्रिलोकी तु त्रिभिः पदैः ॥ २३० ॥

जामदग्न्यरामस्य —

अवमानं तु बलवान् तेजसा परिमार्जति ।

தாங்குவர். பாற்கடலைக் கடைந்தபோது ஆமைவடிவங்கொண்ட திருமால் மந்தரமலையைத் தாங்கினார். (௨௨௭)

வராகாவதாரத்திற்கு:—

நல்லவர்கள் மூழ்கிவிட்டால் அவர்களை (வெளியில்) மேலேகொண்டுவந்து சேர்ப்பதற்குப் பெரியோர்கள்தான் ஏற்றவர்கள். பூமியே ஒரு காலத்தில் கடலுக்குள் மூழ்கிவிட்டது. திருமால் வராகாவதாரம் செய்து, வலிமையினால் அதை மேலேகொண்டுவந்து சேர்த்தார். (௨௨௮)

நரஸிம்மமூர்த்திக்கு:—

அசைவனவும் அசையாதனவுமாகிய எல்லாப்பொருள்களிலும் ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் வியாபித்து நிற்கின்றார். அதனாலேதான் பிரஹ்லாதனைக் காப்பதற்காகக் கம்பத்தினின்று நரசிங்கமாகத் தோன்றினார். (௨௨௯)

வாமனருக்கு:—

பராக்கிரமம் (வீறு) இயல்பாகவே தோன்றும். அதற்கு வயது காரணமன்று. திருமால் சிறுவனாக இருக்கையிலேயே மூவுலகங்களையும் மூன்றடியால் அளந்துவிட்டார். (௨௩௦)

पितृकोपाज्जामदग्न्यः पृथ्वीं निःक्षत्रियां व्यधात् ॥ २३१ ॥

दाशरथिरामस्य —

श्रोतव्यन्तु पितुर्वाक्यं श्रुतश्चेत्कीर्तिमाप्नुयात् ।
रामः पितृवचः श्रुत्वा प्राप सर्वोन्नतिं ततः ॥ २३२ ॥

बलरामस्य —

अतिभारो न भर्तव्यो भृतश्चेत्पतनं भवेत् ।
बलं हृत्वा प्रलंबस्तु तद्भारान्मृतिमाप्तवान् ॥ २३३ ॥

बुद्धस्य —

मर्त्येन महतां चित्तं ज्ञायते न कदाचन ।
बुद्धावतारग्रहणं किमर्थं विष्णुना कृतम् ? ॥ २३४ ॥

कल्केः —

पापाधर्मविरोद्धारो हन्तव्या बलिना बलात् ।

பரசுராமனுக்கு :—

பலமுள்ளவன் அவமானத்தைத் தனது வலிமையினால் துடைத்துவிடுவான். தன் தந்தையாரை ஒரு க்ஷத்திரியன் கொன்றான் என்னும் கோபத்தினால் பூமியில் க்ஷத்திரியப்பூண்டே இல்லாமல் அழித்துவிட்டார் பரசுராமன். (உகக)

தசரதராமனுக்கு :—

தந்தையின் சொல்லைக்கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அவ்வாறு செய்வதனால் பெரும் புகழுண்டாம். தந்தை சொல்லைக்கேட்டு அதன்படி நடந்ததனால் ஸ்ரீராமன் எல்லோரையும்விட மேன்மையடைந்தார். (உகஉ)

பலராமனுக்கு :—

பெருஞ்சுமையைச் சுமக்கக்கூடாது. அப்படிச் சுமந்தால் வீழ்ச்சியேவரும். ப்ரலம்பாஸுரன் பலராமனைத் தூக்கிச்சென்று அவராலேயே மரணமடைந்தான்.

புத்தருக்கு :—

பெரியோர்களின் மனதை மனிதனால் ஒருபோதும் அறியமுடியாது. விஷ்ணு எதற்காக புத்தராய் அவதரித்தார்? (உகச)

கல்கிக்கு :—

தர்மத்தைப் பகைக்கும் பாவிகளை வலிமையுள்ளவன் வலுவில் கொல்ல

கடியில் சாத்யாசாத்யம்.

தந்தமொன் றுகிலஞ்சஞ் சிறிதெனக் கிரண்டாந் தந்த
மந்திர மதனுல் தீரும் மருந்தினுல் மூன்றுந் தந்த
மிந்திரர் முதலாந் தேவர் யாவரு முனிவர் தாமும்
வந்தவர் பொழுதந் தீரா வடுவுறும் நாலாம் பல்லே. (24)

(இ-ள்) ஒரு பல் மாத்திரம் கடிவாயில் பதிந்திருந்தால் அஞ்சவேண்டாம், விஷம் சிறிது என்று உணரவும். இரண்டு தந்தங்கள் பதிந்திருந்தால் மந்திரத்தினுல் விஷம் மீளும். 3 தந்தங்கள் கடிவாயில் அழுந்தியிருந்தால் மருந்தினுல் தீரும். 4 பற்களும் கடிவாயில் அழுந்தினுல் எந்த தேவர் முனிவர் வந்தாலும் விஷம் இறங்காது.

கடிவாயின் அஸாத்ய லக்ஷணங்கள்.

கடித்தவாய் தடிக்கினுங் கடுத்தெரிந்து வீங்கினும்
நடுக்கணீர் மிகப்பரந்து நாவுலர்ந்து நிற்கிலுங்
*குடித்தவாய் மருந்துவட்டி நெஞ்சினின்று கொட்டினும்
படித்த மந்தி ரங்களாற் பயன்க ளேது மில்லையே. (25)

(இ-ள்) பாம்பு கடிபட்ட புண்ணின் வாய் தடித்தாலும், கடுத்தல் எரிச்சலுடன் வீங்கிவிட்டாலும், அதிலிருந்து ஊன் நீர் வடிந்தாலும் விஷம் நீங்காது. நோயாளிக்கு அதிகமான நாவறட்சி ஏற்பட்டாலும், மருந்துகளைக் கொடுக்கும்போது அவை உட்செல்லாமல் வாந்தியானுலும் பயனில்லை. மந்திரங் களும் பலியாது.

குறிப்பு:— 3 வரியில்

*" குடித்திடும் மருந்துகள் குமட்டியங் கெடுப் பினுங்",

என்றும் பாடபேதம்.

இதுவுமது

கடித்தபோதே கண்சிவந்து பல்லுமுகமுங் கருத்திடினுங்
கடித்தபோதே யவர்கழுத்து வணங்கிவரினுங் கலங்கிப்போய்
கடித்தபோதே மூத்திரமு மலமுஞ் சிவந்தே கழிந்திடினுங்
கடித்தபோதே யவர்தமக்குக் காலன் வரவென் றறிவீரே. (26)

(இ-ள்) பாம்புகடியுண்டவனின் கண்கள் சிவந்து, பற்கள், முகம் இவை கருநிறமாகி, கழுத்தும் நிலை நிற்காமல் இருந்தால் அவன் பிழைப்பதரிது. நோயாளி நிலை தடுமாறிப்போனுலும் மலமும் மூத்திரமும் சிவந்து இறங்கினுலும் அவன் இறப்பது நிச்சயம்.

வேகமறிதல்.

வேருசிற்கு முதல்வேகம் வியர்த்துவெதும்பு மிருவேகஞ்
சோராசிற்கு மூவேகம் சோற்றைக் கக்கும் நால்வேகம்
மாருவஞ்சி விக்கட்டா மாருவேக மறிவழியும்
மேராமேழி விமைக்கொட்டு மெட்டாம் வேகம் பட்டாரே. (27)

முதல்வேகம் = உடலும் மனதும் தனியாகும்.
இரண்டாம் வேகம் = வியர்வை யுண்டாகும், உடம்பு கன்றிப்போம்.
மூன்றும் வேகத்தில் உடல் சோர்வடையும்.
நான்காம் வேகத்தில் சாப்பிட்ட சோறு வாந்தியாகும்.
ஐந்தாம் வேகத்தில் உடல்நிலை கவலைக்கிடமாகும்.
ஆறும் வேகமாகில் அறிவு பேதிக்கும்.
ஏழாம் வேகத்தில் கண்கள் ஒளியிழந்து கொட்டாது.
எட்டாம் வேகத்தில் உயிர் பிரியும்.

குறிப்பு:— வேகம் என்பது உடலில் பாம்பு விஷம் பரவப்பரவ அதனுலுண்டாகும் குறிகள். இவை பாம்புகடி விஷத்தின் அளவிற்குத்தக்கபடி வெகு சீக்கிரத்திலோ அல்லது கிரமமாகவோ உண்டாகும்.

" மாருவஞ்சிற் கண்ணிமையா மாருவேக மறிவழிக்கும்
மேராவேழில் விரை விரைக்கும் எட்டாம் வேகம் பட்டாரே"

என்றும் பாடபேதம்.

அவக்குறியறிதல்.

அண்டம் நான்றிடில் வாயகங் காந்திடில்
விண்ட கண்விழி பெய்நடு நின்றிடி
லுண்டு சீவனென் ருேதி மயங்குவீர்
கண்டு கொள்ளிது காலனு மாகுமே. (28)

(இ-ள்) அண்டகோசத்தில் புண்களுண்டாகி, உள்வாயும் வெந்துபோய், கண் விழியும் அசைவின்றி நின்றுவிட்டால் உயிர் போய்விட்டது என்று தெரிந்து கொள்ளவும். நோயாளி பிழைத்துவிடுவான் என்று மயங்கவேண்டாம்.

குறிப்பு:— இச்செய்யுள் அகஸ்தியர் ஸர்ப்பாரூடத்தில் கீழ்க்கண்டபடி காணப்படுகிறது.

" அண்டம் நான்றில் வாயுங் கருத்திடில்
விண்டகையும் விரலும் நிமிர்ந்திடிற்
உண்டுதா னுயி ரென்று லகோர் சொல்
கண்ட காரணங் காலனுமாகுமே ".

இதுவுமது

கருங்கண் ணிரண்டுஞ் சிவந்திடினுங்
கரமுங் கழுத்தந் தாழ்ந்திடினு
மொருங்கு வாய்நீ ருலர்ந்திடினு
முகிரும் பல்லுங் கறுத்திடினும்
பொருங்கிண்ணரக்கன் சரந்துரக்கப்
போன்றுஞ் சேனையன்றய்ய
மருங்கிலனுமன் கொண்டு வந்த
மருந்தே வரினு மீளாதே. (29)

(இ-ள்) கண்கள் சிவந்து கையும், கழுத்தும் நிற்காமல் விழுந்து விட்டாலும், வாய்நீர் உலர்ந்துவிட்டாலும், உகிர், பற்கள் முதலானவை கறுகிற மாறாலும் அவன் பிழைப்பது அரிது. அனுமான் கொண்டுவந்த (ஸஞ்சீவி) மருந்தாலும் மீளமாட்டான்.

அடக்காறிதல்

ஊன்றிடக் குடோரியாடி லுதிரமே வருவதேனு
மீன்ற மாசிரத்து ரோம மிழுத்திட முறியு மேனு
மான்ற கால் கைகள் நெட்டி யதுமிக வருவதேனும்
தோன்றினு மாயுளுள்ளே வுண்டெனத் துணிந்து சொல்லே (30)

(இள்) தலையில் குடோரி செய்யும்போது (கீறும்போது) இரத்தம் வெளியானாலும் சிரத்திலுள்ள மயிரை இழுக்கும்போது அது முறிந்தாலும், கை, கால்கள் நெட்டி வந்தாலும் (இழுக்கும்போது சொடுக்கினாலும்) ஆயுள் (உயிர்) இருக்கின்றதெனக் கண்டுகொள்ளவும்.

இதுவுமது

மேலதே சுடரதாகில் மேலதே யாவியென்கச்
சாலவே சுடர் கீழாகிற் றதுகீசே ருயிருங்கீழாங்
கோலமாம் பக்கமாகிற் குறித்திடு முயிரும் பக்கம்
நீலமாம் விழியாய் நேரே சீவனும் நேரதாமே (31)

(இள்) தீபத்தின் ஒளிச்சுடரை நோக்கும்போது அச்சுடர் மேலாகத் தெரிந்தால் உயிரும் மேல் நோக்கியும், தலைகீழாகத் தெரிந்தால் உயிரும் தலை கீழாகவும், பக்கவாட்டில் தெரிந்தால் உயிரும் பக்கவாட்டில் இருப்பதாகவும், நேராகத் தீபச்சுடர் தெரிந்தால் உயிரும் நேராக இருப்பதாகத் தெரிந்து கொள்ளவும்,

இதுவுமது

பிரம்புகொண் டடித்திடிற் பிரப்புபோல வீங்கினும்
பீதமேறி வாயுவுள் ளடக்கி மெய் வெதும்பினுங்
குரும்பைபோ லுடம்பெலாங் குணப்படச் சிவக்கினுங்
கும்பநீர் சொரிந்திடக் குளிர்ந்து கூசுமாகினும்
நிரம்பு நாடி பொன்பதும் நிறம்படச் சிவக்கினும்
நீண்டநீரில் விட்டிட நிலத்தளவு தாழ்கினு
முரம்பெறு விடங்களாவி யுண்டதில்லை யென்னவா
முள்ளடங்கி நின்றதாவி பென்னலாகுமுண்மையே (32)

(இ-ள்) பிரம்பால் பாம்பு கடியுண்டவனையடிக்கையில் அந்த இடம் வீங்கினாலும், உடல் மஞ்சணிந்து வாயுவுள்ளடங்கினாலும், உடல் சிவந்தாலும், வியர்வையரும்பிக்குளிர்ந்து கூசினாலும் 9 நாடிகளும் சிவந்தாலும் உயிர் போக வில்லை என்று அறிந்து கொள்ளவும்.

விரியன் முதலான பல பாம்பின் குணம்

வழலை கடித்த வாயுதிரஞ் சொரிந்து நாவி வழுவழுக்கும்
நிழல் சேர் விருமல் குருதியுடன் நிணமுஞ் சேநங் கற்றடியே
யழலே யெயிரு படுங் கடிவா யழன்று நோகும் பெருஞ்செய்பான்
சுழலாஞ் சிறுநீர் மஞ்சளென்னச் சோரச் சோரச் சோர்ந்திடுமே (33)

(இ-ள்) வழலை கடித்த வாயிலிருந்து இரத்தம் விடாமல் சொரியும் நாக்கும் வழவழப்பாகும். விரியன் பாம்பு கடித்தால் இரத்தத்துடன் துர்நீரும் கசியும், கண்ணாடி விரியன் கடித்தால் கடிவாயில் தாங்கவொண்ணாத அழற்சி யுண்டாகும். பெருஞ்செய்பான் கடித்தால் சிறுநீர் மஞ்சளாக இறங்கும்.

இந்த சர்ப்ப விஷத்தையும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதியுடனே சேர்த்தார்கள். ஆகலால் அறிவோர்களறிவாலறியவும்.

சர்ப்பவிஷ நிதானம் முற்றும்.

காச நிதானம்.

அரசரோ கந்தனக்கே யமைச்சராங் காசரோகம்
தரைமிசை மாந்தர் தம்மைச் சார்ந்திடும் வகையோதன்னி
லுரமிசை கிலேசந் தங்கு முறுதுய ராலு மாதர்
தருமயலாலுந் தூமஞ் சார்துகள் முகர்ததாலும். (1)

இயங்கிய பிராணவாயு மேனெக்கி இருமலுண்டாய்
தியங்கிய வாதகாசம் பயித்தியஞ் சேர்ந்த காசந்
தயங்கிய சிலேற்ப காசஞ் க்ஷதகாசஞ் சயகாசந்தான்
பயன்பெறுங் காசமஞ்சும் பிறந்திடும் பகுதிதானே. (2)

(இ-ள்) ரோகங்களுக்கு அரசனான க்ஷயரோகத்திற்கு மந்திரியாகக் காசரோகத்தை எண்ணவேண்டும். அந்நோய் வரும் விதமாவது: மனதில் ஏற்படும் தீராத கவலையினாலும், அதிகமான ஸ்திரீ ஸம்போகத்தினாலும், புகை, தூசி முதலானவைகளை அடிக்கடி முகர்வதனாலும் தேகத்திலுள்ள பிராணவாயு மேல்நோக்கி இருமலைக்கொடுத்து 1. வாதகாசம், 2. பித்தகாசம், 3. கபகாசம், 4. க்ஷதகாசம், 5 க்ஷயகாசம் என்ற 5 வகைக் காசநோய்களை உண்டாக்குகின்றன.

காசரோகத்தின் பூர்வரூபம்.

அக்கினி மந்தந் தொண்டை யரிகுர லனம்வெ றுத்தல்
கக்கிய விருமல் தொண்டை காந்துதல் தினவுண்டாதல்
தொக்கினிற் சுரமுண்டாதல் சூடுள பதார்த்தந்தேட
லிக்குண காசரோக வுற்பவ மென்னலாமே. (3)

(இ-ள்) பசியின்மை, தொண்டைக்கம்மல், ஆகாரத்தில் வெறுப்பு, இருமல், தொண்டையில் புகைச்சல், வலி, அரிப்பு, உடம்பில் சூடு, சூடான பதார்த்தங்களில் இச்சை முதலானவைகள் இந்நோயின் பூர்வரூபங்களாகும்.

வாதகாசக் குறிகள்.

வாதகாசத்தின் செய்கை வகுத்துநான் சொல்லக்கேளீர்
சீதமாம் பதார்த்தமின்றி யுட்டின பதார்த்தந் தேடும்
ஏதமாஞ்சென்னி நெஞ்சு பாரிச மிவை நோவுண்டாம்
போதமாம் பலமுமாய்ந்து போசனம் பகையுமாமே. (4)

(இ-ள்) உஷ்ணமான பதார்த்தங்களின் மேல் ஆசை, தலைவலி, நெஞ்சில் வலி, பக்கங்களில் வலி, உடம்பில் பலக்குறைவு, ஆகாரத்தில் வெறுப்பு முதலான குறிகள் வாதகாசத்தில் காணப்படும் குறிகளாகும்.

பித்த காசக் குறிகள்

பித்தகா சத்தின் செய்கை பெய்வளை மயிலே! கேளாய்!
ஒத்தவுட் டினமிகுந்த தாகம்வாயுலர்தல் நாவு
கைத்தல்சத் தித்தல் பித்தங் கக்கிட லுடம்பு காய்த
லித்தனைக் குணமு முண்டாங் தேகமும் வெளுக்கு மென்றே (5)

(இ-ள்) உடலில் சூடு அதிகரித்து, நாவறட்சி, வாயுலர்தல், நாக்கில் கைப்புச்சுவை, வாந்தி, பித்த வாந்தி, காய்ச்சல், தேகம் வெளுத்துப்போதல் முதலான குறிகள் காணும்.

கபகாசக் குறிகள்

சீரிய சிலேத்மகாசஞ் சென்னி நோஞ் சிலேற்பம் வீழு
மூறிடு மருசி வாய்நீ ரொழுகிடு மிரும லுண்டாம்
மீறிய சுவாச முண்டா மிணரது தினவு முண்டாங்
கூறிய குணங்க டன்னைக் குயில்மொழி! யறிந்துகொள்ளே (6)

(இ-ள்) தலைவலி இருமலுடன் கபம் விழுதல், அருசி, வாயிலிருந்து உமிழ் நீர் சுரத்தல், இருமல், மேல்மூச்சு, அரிப்பு முதலான குறிகள் காணப்படில் அது "கபகாசம்" என்ற நோயாக அறிந்துகொள்ளவும்.

க்ஷதகாசக் குறிகள்

க்ஷதகாச குணஞ் சுவாசஞ் சந்துநொந் துடம்புகாய்த
லிதமான அனம் வெறுத்தல் சிலேற்பனம் விளைந்து கக்கல்
அதுநாற லிருமல் தண்ணீ ரபேட்சித்தல் மூர்ச்சையாத
லிது காணல் நயன மூர்த்தித் திட்டியாய் விழிக்கு மென்னே (7)

(இ-ள்) மேல்மூச்சு, மூட்டுகளில் வலி, ஜ்வரம், ஆகாரத்தில் வெறுப்பு, கபமாக வாந்தியெடுத்தல், வாயில் துர்நாற்றம், அடிக்கடி தண்ணீர் பருகல், மயக்கம் உண்டாதல், கண்விழி மேல் நோக்கிப்போதல் முதலான குறிகள் க்ஷதகாசத்திலுண்டாகும்.

க்ஷயகாசக் குறிகள்.

சயகாச குணத்தைக் கேளாய் தாகமோ கங்கள் தேகம்
பயம்வாக் கிளைத்தல் நோகல் பலப்படச் சுரமே காய்தல்

சுயமான வுடம்பு தன்னில் நிறங்கெடல் சுவாசங் காணல்
நயமான கண்மேனோக்கல் யிக்குணம் நவிலுமாமே. (8)

(இ-ள்) தீராத தாகம், அடிக்கடி மூர்ச்சை, உடல் இளைத்துப்போதல், பீதி, பேச இயலாமை, உடம்புவலி, அடிக்கடிச் சுரம் உண்டாதல், உடம்பின் இயற்கை நிறம் மாறுபடல், மேல்மூச்சு, கண்விழி மேல்நோக்கல் முதலான குறிகள் காணப்படில் அவை "க்ஷயகாசத்தின்" குறிகளாம்.

தோந்த காசம் ஐந்தின் குறிகுணங்கள்.

இருமியே சீயுமுண்டாயிடையிடை சுரமுந்தோன்றி
மருவியவ சனந்தானு மசத்துலர்ந் தாழும்வற்றி
கருவியை குறைத்து வாடுங் கசரோகக் காசமாமே. (9)

(இ-ள்) இருமலுடன் சீழும் இடையிடையே விழும். ஜ்வரம் அடிக்கும். ஆகாரம் வெறுத்துப்போம். தாடை இளக்கும். உடம்பும் இளைத்துப்போம் இவைகளும் "க்ஷயகாச" லக்ஷணங்களாம்.

மந்தார காசக் குறிகள்

தூயதோர் நாசி தன்னில் தும்மல்தான் மிகவுமுண்டாம்
நோயநீர் விழுந்து நெஞ்சு நொந்தடைத் தீளை வாங்கு
மாயு மந்தார காசத்தடவிது தானே யென்ன
மாயமா முனிவன் சொன்ன வளமையை யறிந்துகொள்ளே (10)

(இ-ள்) அடிக்கடி தும்மல் உண்டாகும், சளி ஒழுகும். நெஞ்சில் வலி ஏற்பட்டு மேல் மூச்சு உண்டாகும். இவை மந்தாரகாச லக்ஷணங்களாம்.

வேக காசம்

விண்ணிற் சுழன்று தலைகனத்து வெளுத்து வற்றித் திமிர்த்தெங்கும்
கண்ணைப் பார்க்கில் மஞ்சணிந்துக் கமல முகமும் வெளுவெளுத்து
எண்ணிக் கருமமொன்று செய்பி லிளைப்பு முட்டித் துபநண்டாய்
நண்ணிப் பெரியதாது கெடும் நவிலும் வேக காசமிதே (11)

(இ-ள்) தலை கனத்து மயக்கம் உண்டாகும். உடல் வெளுத்துப்போம். உடலில் மதமதப்பும் ஏற்படும். கண்கள் மஞ்சள் நிறமாகும். முகம் வெளுத்துப் போம். ஒரு வேலையைச் செய்ய ஆரம்பிக்கையில் மேல்மூச்சு அதிகமாகித் துன்பத்தைத்தரும். தாதுக்கள் கெடும். இவை வேககாச லக்ஷணங்களாம்.

பக்க மந்தாரகாச லக்ஷணங்கள்.

இக்கணந் தன்னிலொக்க யிருமிபே யிளைப்பு முண்டாய்
சிக்கென நெஞ்சைக்கட்டி சீறிடு மிருதயத்தை
மிக்கதோர் வயிறு தானு மிதந்து தான் பொருமுமாகில்
பக்கமந் தாரகாச மிதுவெனப் பகரலாமே. (12)

(இ-ள்) இருமல், மேல்மூச்சு, முதலானவைகளுடன் நெஞ்சைக்கட்டி இருதயத்தில் வலியைக்கொடுக்கும். வயிறு பொருமும். இவை "பக்க மந்தாரக் காசக்" குறிகளாகும்.

ஜ்வர காசக் குறிகள்

அங்கத்திற் சுரமு முண்டா யறவுலர்ந் தாளும் வற்றித்
தங்குற்றப் பீனிஸந்தான் றலையில்நீ ருவாதையுண்டாய்
பொங்குற்ற இருமலுண்டாய் போசனம் செல்லாதாகி
லிங்குற்ற தோஷந்தன்னைச் சுரகாச மென்னலாமே. (13)

(இ-ள்) தேகத்தில் ஜ்வரம் உண்டாகும். உடலும், தாளும் இளைக்கும். ஜலதோஷம், தலையில் நீர்கோர்வை, இருமல் ஏற்படும். ஆகாரம் உட்செல்லாது.

சய நிதானம்

கங்கைசேர்சடையான் சென்னி கலந்தவ னம்ருத ரூபந்
தங்கிய கதிரோன் மற்ற சராசரச் சொர்க்கந் தீர்ப்போ
லிங்கிதன் குபேரனிந்து வென்பவன் றனையு மங்க
பங்கமே கொண்டோ னிந்தப் பார்மிசை யுறையுஞ் சொல்லாம் (1)

சீரிய தொன்மை செய்த தீவினை தந்தையாகப்
பாரிலிப் பிறப்பிற் செய்த பாவமே தாயதாகப்
பேரியச் சயக் குமாரன் (விறந்திலா கிறமத்தப்பே)
காரிய செவிலித் தாயாய் கனம் பெற வளரும் நாளில். (2)

(இ-ள்) கங்கையைச் சடையிலணிந்தவன் தலையில் இருப்பவனும், அம்ருத மயமான கிரணங்களையுடையவனும், மற்ற உலகங்களின் களைப்பை நீக்குகின்றவனும் எல்லோருக்கும் ஹிதமானவனும், குபேரனை யொத்தவனுன இந்து (சந்திரன் என்பவனை மானபங்கம் செய்த க்ஷயராஜாவின்) பிறப்பைச் சொல்ல ஆரம்பிப்போம்.

முன் சென்மங்களில் செய்த தீவினைகளைத் தந்தையாகவும், இப்பிறப்பில் செய்யும் தீவினைகளைத் தாயாராகவும் அடைந்து க்ஷயக்குமாரன் செனிக்கிறான்.

சயவரலாறு.

துணையெனப் பித்தமான தோழரோ டிணங்கி ஈசன்
கணில்வரு சுரராஜாவைக் கண்டுமந் திரிப்பேர் கட்டி
யிணைபெறப் பாண்டுவான நாரியை யொத்திருந்து
குணமிகு மிரத்தமான குமாரரை யீன்றெடுத்தே. (3)

(இ-ள்) க்ஷயக்குமாரன் பித்தமான தோழருடன் சேர்ந்து ஈசனின் கண்களிலிருந்து உண்டான ஜ்வர ராசாவைக் கண்டு, மந்திரியாகிப் பாண்டு வென்ற ஸ்திரீயை மணந்து இரத்த பித்தம் என்கிற குமாரரைப் பெற்றான்.

இதுவுமது

குலவிய பீனிஸத்தின் கூடார வாசல் தன்னில்
பெலவிய அருசி சத்திப் பிரதானத் தொழில்கள் செய்யக்
கலை பெரு கட்டியங்கள் கழியதிசாரங் கூற
நிலைபெரு சுவாசவாசி நடுங்கிமென் மேலுஞ் செல்ல. (4)

புவிமிசை இராசரோகம் பொருந்திடும் வாலரோகம்
சவிபெரு தருணமிக்கக் கனிகமே தபின மங்க
மவிதரு சயமே மற்ற * வராத்தமரா சேடசிமாவோ
டிவையிரு நான்குபேத மிசைகுணங் கூறுவேனே. (5)

(இ-ள்) பீனஸம் என்ற கூடாரத்திற்குள் அரோசகம், வாந்தி என்ற இருவர்களும் முக்கியமான வேலைகளைச் செய்ய, அதிஸாரம் க்ஷயரோகத்திற்குக் கட்டியங்கள் கூறச் சுவாசம் நடுங்க (க்ஷயரோகம்) ராஜ்யபாரம் செய்கிறான். இவை 8 வகைப்படும்.

1. வால க்ஷயம்
2. வீர ,,
3. தருண ,,
4. கனிக ,,
5. தபன க்ஷயம்
6. க்ஷயம்
7. ஆர்தம்?
8. லட்சமம்?

வாலரோகம்.

பித்தமே பிரகோபித்துப் பேதமாஞ் சரீரமெல்லா
மெத்தவே யிளைத்துமோக மிகுதியாய்ச் சுவாசமுண்டாய்
சித்தமா யிருமலுண்டாய்ச் சிறிடில் வாலமாமே. (6)

* இவ்விரு வகைகளும் சரியாக விளங்கவில்லை.

(இ-ள்) தேகத்தில் பித்தம் பிரகோபமடைந்து சரீரத்தை மெலிவடையச் செய்யும். மேல் மூச்சு அதிகமாக வாங்கும். இருமலும் அதிகமாயிருக்கும். இவை வாலக்ஷயத்தின் குறிகளாகும்.

வீரக்ஷயக் குறிகள்.

கண்டத்தில் குத்துண்டாகுங் கபாலத்தில் வலியுண்டாகுந்
திண்டித்த வுடலிளைக்குஞ் சிலேற்பன மிகுதியுண்டாம்
பண்டுத்த சுரம் பேதிக்கும் படர்ந்தரோ சகமுமுண்டாம்
வண்டுற்ற குழலாய்! வீர லக்ஷணம் வகுக்குங் காலே. (7)

(இ-ள்) கழுத்தில் குத்துவலி, தலைவலி, உடம்பு இளைத்தல், அதிகமாகக் கோழை வெளிவரல், ஜ்வரம், அரோசகம் இவை வீரக்ஷயத்தின் லக்ஷணங்களாம்.

தருணக்ஷய லக்ஷணங்கள்.

இடதுபா ரிசத்தில்வாயு வேறிடு மிருமலுண்டாந்
திடமுறு சுரம் பேதிக்கும் சிலேற்பனஞ் சுவாசமுண்டா
மடமயி லனையாய்! இந்தக் குணங்களே வந்தபோது
விடமுறு தருணரோக மிதுவென விளம்ப லாமே. (8)

(இ-ள்) இடது பக்கத்தில் வாயு அதிகரிக்கும். இருமல் உண்டாகும். ஜ்வரம் அடிக்கும். கபத்துடன் மேல்மூச்சு ஏற்படும். இவை தருணரோகக் குறிகளாகும்.

கணிகரோக லக்ஷணங்கள்.

உரத்தினிற் குத்துண்டாகும் வாந்திக்குஞ் சுவாசம் வாங்கும்
இரைத்திடு மிருமலுண்டா மிளைத்திடுஞ் சரீர மெல்லாம்
வருத்திடுந் தாகமுண்டா மகாகட்டங் கணிகரோகந்
திருத்திடுங் களபக்கொங்கைத் தேன்மொழித்திருவே யன்னாய்! (9)

(இ-ள்) மார்பில் வலியுண்டாகும். வாந்தி ஏற்படும். மேல்மூச்சு வாங்கும். இரைப்புடன் இருமல் ஏற்படும். சரீரம் இளைக்கும். தாங்கமுடியாத தாகம் உண்டாகும். மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கவல்ல "கணிகரோகம்" என்பதன் குறிகள் மேற்கூறியவைகளாகும்.

தபனக்ஷயக் குறிகள்.

சந்துகள் தோறும் குத்தும் தளர்ச்சியா மிருமலுண்டாம்
நொந்திடு மங்கமெல்லாம் நுவல் குணங்கண்டபோது
இந்த நோய் தபனமென்ன விசைத்திடரிதற்குச் செய்யுந்
தந்திரஞ் சொல்வே னிந்தத் தரணியிற் பெரியோர் முன்னே. (10)

(இ-ள்) மூட்டுகளில் குத்துவலி யுண்டாகும். உடலும் தளரும். இருமலும் அதிகரிக்கும். பொதுவாகவே தேகத்தில் வலி யுண்டாகும். இக் குறிகளினுல் "தபனக்ஷயம்" என்று கண்டுகொள்ளவும்.

சயரோகத்தின் குறிகள்.

பீனிஸமுண்டாந் தொண்டை பேதிக்கும் நெஞ்சு பேசு
மானதோர் சிலேத்ம முண்டா மலகெல்லாம் வலிக்கும் வாசந்
தானது தெரியாதென்னுந் தன்மையுண் டானபோது
தேனமர் குழலாய்! கேளாய் சயமெனச் செப்பலாமே. (11)

(இ-ள்) மூக்கினின்றும் நீர், சளி இவை வெளிவரும். தொண்டைக் கம்மல் உண்டாகும். நெஞ்சில் சளி கட்டும். கபமும் கட்டும். இரு விலாப் புறங்களில் வலிபுண்டாகும். மூக்கில் வாசனையறியுஞ் சக்தி நீங்கும். இக்குறிகள் ஏற்பட்டால் "க்ஷயரோகம்" உண்டாகியது என்று தெரிந்துகொள்ளவும்.

க்ஷயத்தில் ஸாத்யாஸாத்யம்.

** (ஆறதமுடனேரு லெட்சிமமிவை யிரண்டு மாகா)*
வீரமாங் கணிகமாகில் மிகுகட்ட ரோகமாகும்
தாரணி குழலாய்! சொன்ன சாத்தியா ஸாத்தியங்கள்
பாரினிற் கண்டு செய்யப் பகர்கின்றே மறிகுவீரே. (12)

(இ-ள்) ஆர்தம், லட்சிமம் இவ்விரண்டும் அசாத்யம். கணிகக்ஷயம் - கஷ்ட சாத்யமாகும். பாக்கி வகைகள் சாத்யமாகும்.

உளமாந்தக் குறிகள்

மாதர் மயக்கில் மருந்தீட்டில் வந்த இருமல் புலால் நாறும்
சீதமிகுந்தே பத்தியமுஞ் செரியா தெரித்தே யேப்பமிடும்
வாதை மிகுந்து சுரமுமுண்டாம் வருந்து மீளை யிருமலுண்டாம்
நீதி பயிலுஞ் சிரங் கனக்கும் நினைவு மறதி தோன்றிடுமே. (1)

நெஞ்சது நழுக்கி நொந்து நினைவழிந் திருமலுண்டாய்
பஞ்சுபோற் சுரமுந் தோன்றிப் பழுத்துள்ளே சீயுங்கட்டி
அஞ்சவே அய்யும் பித்தும் அசனமு மொறுத்து வந்தா
லொஞ்சிடா துண்மை சொன்னே முளமாந்த மென்னலாமே. (2)

(இ-ள்) அதிகமான ஸ்திரீ போகத்தாலும், மருந்தீடுகளினுலும் இருமல் உண்டாகும். வாயிலிருந்து துர்நாற்றம் வீசும். சாப்பிட்ட ஆகாரம் சீரணியாமல்

---

* இச்செய்யுளின் முதல் அடி விளக்கமாக இல்லை.

புளித்த ஏப்பமுண்டாகும். அதிகமாகத் துன்பத்தைக் கொடுத்துச் சுரமும் அடிக்கும். இருமும்போது கோழை வெளியாகும். தலை வலிக்கும். அடிக்கடி மறதியும் உண்டாகும். பின்னர் நெஞ்சில் வலி ஏற்படும். மார்பில் சீழ் கட்டும். கபமும் பித்தமும் அதிகரித்து ஆகாரத்தைத் தள்ளும். இவை உளமாந்தத்தின் குறிகளாகும்.

சுவாசரோகக் குறிகள்.

வாயுவுடனே சிலேற்பன மு மருவி நயன மேனோக்கி
யாயுசுவாச மிகவுண்டா யறிவு மயங்குங் கண்சுழலும்
மேய வேர்வை கபமிளைப்பு மேவுமலமூத் திரஞ் சிறுக்குந்
தோயு மூர்ச்சை மிகநீளுஞ் சுவாசகுணமென் றறிவீரே. (1)

(இ-ள்) வாயுவும் கபமும் அதிகரிக்கும் கண்கள் மேனோக்கும். மேல்மூச்சு அதிகரிக்கும். அறிவும் மயங்கும். கண்கள் சுழலும். வியர்வை யரும்பும். தேகம் இளைக்கும். மலம் மூத்திரம் முதலானவை குறையும். அடிக்கடி மூர்ச்சை யடைவான். இவை சுவாசரோகக் குறிகளாகும்.

சுவாசத்தின் செயலும், பெயரும்.

மூலவா தாரந்தன்னில் மூண்டெழு மசைவை தோன்றி
மேலிடை பிங்கலாதி மேல்கொண்டு விரவி நாக
தூலசூக் குமத்தைப் பற்றிச் சுவாதியாய்ச் சுழினை மூட்டிச்
சாலவே பன்னிரண்டா மங்குலந் தகைமை தானே. (2)

(இ-ள்) மூலாதாரத்தில் ஒரு அசைவு ஏற்பட்டு அது இடை, பிங்கலை என்ற நரம்பின் மூலமாக மேல்நோக்கி எழுந்து, ஸ்தூல சூக்ஷ்ம தேகத்தைப்பற்றிச் சோதி ஸ்வரூபமாகி ஸுஷும்னு நாடியின் மூலமாகச் சென்று 12 அங்குல நீளமுள்ள சுவாஸமாகப் பரிணமிக்கிறது.

சுவாசங்களின் எண்ணிக்கை.

தகையுடன் பன்னிரண்டா மங்குலந் தனிலோர் நாலும்
பகையுறப் பாழ்போ யட்டும் பரிவுடன் மீளுமீதாந்
தகையொரு நாழிகைக் கெண் சுவாதியா யெழுமுன்னூறு
வகையுறு மறுபதாக வளர்ந்திடும் போது ரண்டில் (3)

வளர்கதிர் மாலையென்ன வயங்குநா ளொன்றினுக்குத்
தளருட னிருபத்தோரா யிரத்தறு நூறதாகி
யெழுப(ம)து சுவாச மேழா யிரத்திறு நூறும் பாழாய்
விளைவுடன் மீளும் பன்னூலாயிரத் தறுநூறென்றே. (4)

(இ-ள்) 12 அங்குலமுள்ள சுவாசத்தில் 4 அங்குலம் வீணாகி 8 அங்குலமாகவே போய் வந்துகொண்டிருக்கும். நாழிகைக்கு 360 சுவாசங்கள் வீதம் 1 நாளுக்கு (60 நாழிகைக்கு காலையிலும் மாலையிலுமாக) 21600 சுவாசங்களாகப் பரிணமிக்கும். அவற்றுள் 7200 சுவாசம் பாழாகும். பாக்கியுள்ள 14400 சுவாசமே ஜீவனுக்குப் பயன்படும்.

குறிப்பு: மீதியுள்ள சுவாசங்கள் 14600 என்பது சரியாக இல்லை. 14400 சுவாசங்களே கணக்கில் வருகிறது. தற்கால ரீதியிலும் சுவாசம் 1 நிமிஷத்தில் சராசரி 15 முதல் 18 வரை சென்று வருகிறது. 15 முறை என்று வைத்துக் கொண்டால் 1 நாளைக்கு 21600 சுவாசம் கணக்காகிறது.

5 வித சுவாசங்களின் பெயர்.

ஏயென்ற பிராணநாடி யியைந்தெழுஞ் சுவாசமஞ்சு
மேயபெய ரோதுங் காலை வினவு குத்திரம் விசர்கம்
... ...
ஓய்விலாப் பகர்ந்தான் மூர்த்துவ மஞ்சின் பெயரே. (5)

(இ-ள்) பொருள் சரியாக விளங்கவில்லை.

குத்திரச் சுவாஸம் இரண்டாம் சுவாஸத்தின் குறிகள்.

பேர்பெறு குத்திரந்தான் பிழையின்றி யெழும் சுவாச
சார்பெறு சுவாசஞ் செய்யுந் தகைமை நான் சாற்றக் கேளாய்
யேர்பெற விரைவினோடி யிளைந்துமே விளைப்பி ளைக்கும்
நேர்பெற நரம்பிரண்டும் நெற்றியுற் புடைத்திருக்கும். (6)

புடையுறு விலாவிரண்டும் புருபுரென் றெடுத்துக் காட்டித்
திடமுற நெஞ்சு நொந்தே யுச்சியுஞ் சிறிது நோவாய்க்
கடியதோ ரிரும லுண்டாய் கழன்று வாய் நீர் சுழற்றும்
முடியுறு தாகமுண்டாய் மூக்குநீர் பாயு மின்னே. (7)

(இ-ள்) உடம்பெங்கும் வாயு பரவி, உளைச்சலுடன் மேல்மூச்சு வாங்கும். நெற்றியின் இரு நரம்புகளும் புடைக்கும்.

வயிற்றின் விலாப்புறங்களிலும் வாயு "புர்புர்" என்று சத்தத்துடன் சஞ்சரிக்கும். நெஞ்சில் வலி ஏற்படும். தலை உச்சியிலும் வலியுண்டாகும். இருமலேற்படும். வாயில் உமிழ் நீர் ஊறும். தாகமும் ஏற்பட்டு, மூக்கிலிருந்து நீர் வடியும். இவை இரண்டாம் சுவாஸத்தின் குறிகளாகும்.

மூன்றுஞ் சுவாஸக் குறிகள்.

மின்னனு யுடல் பறக்கு மிவையிரண் டாஞ்சுவாசம்
பின்னைமூன் றுஞ்சுவாசம் பெறிலுடல் வருத்தமாகும்
தன்னில் நெட் டுயிர்க்கு மூக்குப் பொட்டிலுந் தானடுக்கு
மின்னங்கேள் பொருத்துதோறு மிடைந்துதா னேவுதோன்றும். (8)

(இ-ள்) உடலில் மிக்க வேதனையைத் தரும். மூக்கு, பொட்டு இவைகளில் தாங்கமுடியாதபடி நடுக்கமேற்படும். மூட்டுகளில் வலி ஏற்படும்.

இதுவுமது

தோன்றுங்கேள் மலசலாதி சுத்தியில்லாதே விம்மி
யூன்றியே கழியவென்ன வோங்கிடுங் கழிய வொட்டா
ஆன்றதோர் கண் கலங்க லாகக்கி ணேக்கிப் பார்க்கும்.
போன்றதோர் கண்சிவக்கும் புரிதல்மூன் றுஞ்சுவாசம். (9)

(இ-ள்) மலம், ஜலம் பிரியாமல் ஸ்தம்பித்துப்போகும். மலம் ஜலம், போகவேண்டுமென்ற உணர்ச்சி இருக்குமேயன்றி போனால் வெளியாகாது. கண்கள் கலங்கும். பார்வையும் கீழ்நோக்காகும். கண்களில் சிவப்பு நிறமும் உண்டாகும். இவை மூன்றுஞ் சுவாச லக்ஷணங்களாகும்.

நான்காம் சுவாஸத்தின் குறிகள்.

வாதிக்கும் நீர்ச்சுவாஸம் வகையெனிற் கரணமீது
காதிமற் போர்புரிந்தோ ரென்னவே கனத்திளைக்குந்
தீதுறு சிலேற்பனந்தான் செருமியே குறுகுறுக்கு
மோது கண் சீறிப் பார்க்கு முதறியே விழுமென் றுற்று. (10)

உற்றுரை மருளரைப்போ லுரைத்திடுங் குழிய நெஞ்சைப்
பற்றியே வாங்கு முள்ள மலசலங்கழியப் பார்க்குங்
குற்றமே தினமுங் கூறும் கூப்பிடிற் பேதமில்லைச்
சிற்றிடை மயிலே! நாலாஞ் சுவாசமாய்ச் செப்புவாயே. (11)

(இ-ள்) மற்போர் செய்தவன்மாதிரி மேல்மூச்சு வாங்கும். தொண்டையில் கபம்பற்றி "குர்குர்" என்று சப்தமிடும். கண்கள் ஒரு பக்கமாகப் பார்க்கும். மருண்ட நோக்கும் ஏற்படும். நெஞ்சு குழியும். மலம் ஜலம் போவதற்கான உணர்ச்சி யுண்டாகும்; வேதனையைத் தரும். இவை நாலாஞ் சுவாஸக் குறிகுணங்கள்.

ஐந்தாம் சுவாஸக் குறிகள்.

செப்பிய சுவாஸ மைந்தின் செய்தியைப் பகரும்போது
கப்பெரு பெருமூச் செய்துங் கடைக்கண் ணீர் தானேபாயு
மொப்புறக் கண்மூடாமல் மேனோக்கு மொண்சீர் மாதே
மைப்படா விழி துடிக்கும் வாய்பல்காற் பிளக்குந்தானே. (12)

(இ-ள்) பெருமூச்சுண்டாகும். கடைக்கண் வழியாகக் கண்ணீர் பாயும். கண்கள் மேல்நோக்கிய பார்வையாகும். விழிகள் துடிக்கும். வாய், பற்கள், கால்கள் முதலான இடங்களில் தாங்கமுடியாத வலியும் உண்டாகும்.

சுவாச விக்ருதிக் குறி குணங்கள்.

காலுமிக் குணங்கள் சேருங் காரணங் கருத்தில் கண்டு
மேலுரை விகுர்த்தி செய்யுங் குணந்தனை விளம்பில் மெய்தான்
சாலவே குளிர்தல் வெம்பல் சார்ந்திடுங் குளிர் விடுத்தா
லாலவாய் கைத்த லுச்சி யக்கினி யன்ன வெய்தல். (1)

எய்திய உடம்பு வெச்சென் றிருப்பதை யொளித்தல் வியர்த்தல்
மைதிகழ் கண்ணினாளே! வாயது வெளுத்திருத்தல்
செய்தியா மெய்யே சோர்தல் சிலேற்பனங் குருகுருத்தல்
கைதவ ருகுமிந்தக் குணமின்றி மருந்தாற் காறே. (2)

(இ-ள்) தேகத்தில் குளிர், குளிர் நின்றபின் வாயில் கைப்பு, தலையுச்சியில் தீயினால் சுடப்பட்டதைப்போன்ற உணர்ச்சி, உடம்பில் வியர்வை இக்குறிகள் உண்டாகும். வாயும் உலர்ந்து வெளுத்துப்போம். உடம்பு வாட்டமுறுதல், மார்பில் கபம் கட்டி "குர்குர்" என்ற சப்தத்தை யுண்டாக்கல் முதலான குறிகளும் காணும்.

ஸாத்ய லக்ஷணங்களாவன.

காத்திடா உச்சி வெச்சென் றிருக்குங்கண் பஞ்சேறுது
தோத்திடும் பித்தநாடி வெதும்புதல் வாதச்சேற்பங்
கோத்திடா சேற்ப நாடி குடிகொளாதேயிருத்தல்
நீர்த்தடை யாதே யாதல் நிச்சயம் புரிந்துபாரே. (3)

புரிந்து மெய் சோர்ந்திடாதே போர்விழி சிவப் பேறாதே
வருந்திட வுடல் நாறாதே வரிவிழி நீர் மாயாதே
கரிந்து நா வறண்டிடாதே கபமிரை யாதேயாகில்
வருந்தியே பரிகாரஞ் செய் மாதுமை பாகரானே. (4)

(இ-ள்) தலையுச்சியில் சூடு இராமல், கண்கள் பஞ்சடையாமல், பித்த நாடி அதிகரிக்காமலும் வாதகபநாடிகளோ, கபநாடியோ அதிகமாகாமல் இருத்தலும், மூத்திரம் தடைபடாமலிருந்தாலும், உடலில் வாட்டம் இல்லாமலும், கண்களில் சிவப்பேறுமலும், உடலில் நாற்றம் இல்லாமலும், கண்ணீர் வழியாமலும், நாவறட்சி, கபத்திஞல் உண்டாகும் "சூர் குர்" என்ற சப்தங்கள் இல்லாமலும் இருந்தால் அந்நோயாளிக்கு மருந்துகளைக்கொடுக்கவும்.

ஸாத்யக் குறிகள்.

பாகன் மொழியின் மாதே! பரையிலோ செவிகேளாதே
வாகுறு முடலந் தன்னில் மயக்கமில்லாதே யாதல்
தாகமா யிளைத்து நெற்றி தனில்வியர் வில்லாதாகி
யேகநற் பிராணனுண்டென் றெய்திநீ மருந்து செய்யே. (5)

(இ-ள்) தேகத்தில் மயக்கமில்லாமலிருத்தல், தாகம், உடல் இளைப்பு, நெற்றியில் வியர்வை இவைகள் இல்லாமலும், இருந்தால் தேகத்தில் உயிர் இருக்கிறதென்று கண்டுகொள்ளவும்.

கவலைக்கிடமான நிலைமை.

செய்தியா யுறங்கில் நெஞ்சந் திடுக்கிடுங் கண்ணீர் பாயும்
மய்யல் வாத சிலேற்ப மஞ்ஞைபாம் பென்னவோடும்.
மெய்யது துடிக்கும் நெற்றி வியர்த்திடுங் கண்பஞ்சாகுங்
கையது நாடி சேற்பங் கார்த்திடுங் கவலையாமே. (6)

(இ-ள்) நன்ருகத் தூங்கிக்கொண்டிருக்கையில் திடீரெனத் திடுக்கிட்டு எழுவான். வாதகப நாடிகள் மயிலைப்போலும் பாம்பைப்போலும் ஓடும். உடல் துடிக்கும். நெற்றியில் வியர்வை அரும்பும். கண்கள் பஞ்சடையும். கையில் கபநாடி, மிகுந்து நிற்கும். இக்குறிகள் கண்டால் கவலைக்கிடமான நிலை என்று தெரிந்துகொள்ளவும்.

மரண லக்ஷணம்.

பல்லைக் கடிக்கும் நெட்டிவிடும் பற்றிப் பிடுங்குஞ் செவிகேளாதே
வலைதனிற்றன் கிடவாதே யெழுந்து மிருந்து முருண்டு வரும்
வில்லைப்போல விரைவிரைக்கும் மேனி குளிரு மிளைப்பெடுக்குந்
தொல்லைப் படாதே வைத்தியரே தூதன் வந்தான் விட்டகலே. (7)

(இ-ள்) அடிக்கடி பற்களை "நெற நெற" என்று கடிப்பான். கை கால்களை சொடக்கிக்கொள்வான். காது கேளாது. படுக்கையிலும் புரளுவான். அடிக்கடி எழுந்திருப்பான். ஆண் குறியும் விறைக்கும். உடலில் குளிர் ஏற்படும். மேல்மூச்சு வாங்கும் இக்குறிகள் காணப்பட்டால் யமதூதன் வந்துவிட்டதாகத் தெரிந்துகொள்ளவும்.

உதரரோக நிதானம்.

உற்றிடு முதரந் தன்னி லுற்றநூற் றெட்டு ரோகம்
பற்றிய குணங்கடன்னைப் பரமனருளிச் செய்யச்
சொற்றமிழ் நூலதாகச் சுருதி நூற் கெல்லைகண்ட
மற்று மா மலையிலுள்ள மாமுனி யருளிச் செய்தார். (1)

(இ-ள்) வயிற்றிலுண்டாகும் 108 ரோகங்களின் குறி குணங்களை சிவபெருமான் அருள வேதார்த்தங்களை யறிந்த பொதிகை மலையிலுள்ள மாமுனிவர் (அகஸ்தியர்) அவைகளைத் தமிழில் அருளிச்செய்தார்.

உதரநோய்க்குக் காரணங்கள்.

கருவுறு மீனின் முள்ளுங் கலந்தமி நெல்லின் வாலு
மருவிய கல்லெலும்பு மங்கையர் மருத்திலீடும்
பருகுசோற் றமலா லும் பழமலம் நிற்கையாலு
மருவிநேர் மயிர்களாலும் வந்திடும் நோய்கள் தானே. (2)

(இ-ள்) மீன்முள், உமி, நெல்லின் வால், கல், எலும்பு முதலான பொருள்கள் ஆகாரத்துடன் உட்செல்லுவதனாலும், ஸ்திரீகள் கொடுக்கும் வச்ய மருந்துகளினாலும், ஆகாரங்கள் சரியாக சீரணிக்காமையினாலும், குடலில் பழய மலம் தங்குவதனாலும், ஆகாரத்துடன் மயிர் உட்செல்லுவதனாலும் வயிற்று நோய்கள் சம்பவிக்கின்றன.

இதுவுமது

புறைபற வுண்கையாலும் பொருமநீர்க் கொள்கையாலும்
சுருளவே முடக்கிக்கொண்டு சுகமுறக் கிடக்கையாலும்
மருளவே மேடுதாவ மனமுமுன் நடக்கையாலும்
பெருகவுண் டோடினாலும் பெய்திடும் நோய்கள்தானே. (3)

(இ-ள்) புறை ஏறும்படி ஆகாரங்களை உட்கொள்ளுவதனாலும், வயிறு பொருமல் உண்டாகும்படி தண்ணீரை உட்கொள்ளுவதனாலும், கைகால்களை முடக்கிக்கொண்டு தூங்குவதனாலும், சாப்பிட்டவுடன் ஓடினாலும், உதரரோகம் சம்பவிக்கும்.

இதுவுமது

மனமுறவுண்கையாலு மகிழ்ந்த வூண் குறைதலாலும்
கனமலஞ் செரிந்து நின்று கழற்றுத லிலாமலாலுந்
தன்மிகத் தேடலுற்றுத், தானுறு மோகத்தாலுஞ்
சினமிக வுநகையாலுஞ் சேர்ந்திடு முதரநோயே. (4)

(இ-ள்) இஷ்டம்போல அதிகமாகச் சாப்பிடுவதனுலும், வேண்டிய அளவு சாப்பிடாமல் பட்டினிகிடந்தாலும், வயிற்றில் மலம் சேர்ந்து வெளியாகாமல் தங்குவதனுலும், பொருளை அதிகமாகத் தேடுவதற்கான பிரயத்னங்களைச் செய்வதனுலும், பொருளின்மேல் அதிகமான ஆசையினுலும், அடிக்கடி கோபித்துக்கொள்ளுவதனுலும் வயிற்றுநோய்கள் ஸம்பவிக்கின்றன.

இதுவுமது

செறிந்துறங் காலதன்றித் திகழுவே யுண்மையா லுந்
தறிப்புறக் கிடப்பதன்றித் தாழ்ந்து கீழ் கிடக்கையா லு
மருத்திடுங் கிருமியா லு மலசல நிற்கையா லும்
பெருத்துள வுதரந்தன்னில் பேணிநோ யாகுங் காணே. (5)

(இ-ள்) கலந்தவறி ஆகாரம் உட்கொள்ளுவதனுலும், விரிப்பில்லாமல் வெறும் தரையில் படுத்துக் கொள்ளுவதனுலும், வயிற்றிலுண்டாகும் கிருமிகளின் உபத்திரவத்தினுலும், மலம், சலம் சரியானபடி பிரியாததனுலும் உதரநோய் உண்டாகின்றது.

இதுவுமது

இப்படி உதரநோய்க ளியம்பிடிலொரு நூற்றெட்டு
மெய்ப்படு ரோகமாக விளங்கியே தோன்றுமென்கச்
செப்புவ ரிதற்கு மேலுந் திகழுநோய்க் குணங்கடன்னை
யொப்பொடு முனிவன் ருனு முறைமுறை யுரைக்கின்ருரே. (6)

(இ-ள்) மேற்கூறிய காரணங்களினுல் வயிற்றில் 108 ரோகங்கள் உண்டாகின்றன என்று தெரிந்துகொள்ளவும்.

வயிற்றுநோய் 108ன் வகைகள்.

அனிலத்தா லெழுந்தரோக மன்பத்தாருகுமென்கத்
தனிவரு பயித்தியத்திற் ருன்ருெரு முப்பதென்க
கனிபடு கபங்க டன்னிற் கலந்திரு பத்திரண்டா
மெனுமிவை முறையே யெண்ணி யிறைவ னருளிச்செய்தான். (7)

(இ-ள்) அவை வாதத்தினுல் 56ம், பித்தத்தினுல் 30ம், கபத்தினுல் 22ம் ஆக 108 ரோகங்களாகின்றன.

குன்மரோக நிதானம்.

திருந்திய வுதரந்தன்னிற் சேரும்நோயொரு நூற்றெட்டிற்
பொருந்திய குன்மமெட்டின் பெயர்குணம் புகலலுற்று
மருந்தினுற் றீருங் குன்ம மொருநான்கு மற்றநான்கு
மருந்திய மருந்தாற்றீரா தசாத்திய மென்னலாமே. (8)

(இ-ள்) வயிற்று வியாதிகள் 108க்குள் குன்மரோகம் 8 வகைகளின் குணங்களையும், பெயரையும் ஆராய்வோம். அவற்றுள் 4 வித குன்மநோய்கள் மருந்தினுல் தீரும். மற்ற நான்கு வகைகளும் மருந்துகளினுல் தீராது.

சாத்யாசாத்ய வகைகள்.

என்றதில் வாதகுன்மம் வலிகுன்மம் சத்திகுன்மம்
துன்றிய சூலகுன்மஞ் சொல்லுமீ தசாத்தியந்தான்
கன்றிய பித்தகுன்மங் கபகுன்மங் குன்மகுரை
யொன்றெரி குன்மம் நான்கு முண்மையாய்த்தீருங்காணே. (9)

(இ-ள்) வாதகுன்மம், வலிகுன்மம், சத்திகுன்மம், சூலகுன்மம் இந்நான்கும் அஸாத்யங்களாகும். பித்தகுன்மம், கபகுன்மம், குன்மகுரை எரிகுன்மம் இந்நான்கும் ஸாத்யங்களாகும்.

வாத குன்மக் குறிகள்.

உடம்பு கால் கரமுமோயு மூதையா லுதரம் விம்ம
நுடங்கிடை மயிலே யீரல் நுதல்தனிற் றிரண்டுநோவா
மிடம்பட விலாவிரண்டு மேறிவே தனையு முண்டாங்
திடம்பட வாதகுன்மஞ் செய்குண மறிந்து கொள்ளே. (10)

ஈரலும் நெஞ்சும்பற்றி யெரித்திடு முளையும் பக்கங்
கார்செறி கபாலந்தானுங் கனத்திடுங் குடற் புரட்டும்
நேர்படக் கிறுகிறுக்கும் நினைவரக் குடல் வலிக்கு
வார்முலைமானே! வாத குன்மத்தின் மகிமைதானே. (11)

(இ-ள்) உடப்பு கை, கால்கள் ஓய்ந்துபோம். மலம் போகாமல் வயிறு பொருமும். ஈரல் குலைப்பக்கத்தில் உருண்டையாகப் புடைத்து வலியுண்டாகும். விலாவின் இரு பக்கங்களிலும் வேதனையுண்டாகும். இவைகளுடன் ஈரல், நெஞ்சு, முதலான இடங்களில் வாயு அதிகரித்து விலாப் புறங்களிலும் வலியை யுண்டாக்கும். தலை கனக்கும், குடல் புரட்டும், மயக்கம் உண்டாகும். நினைவு தடுமாறும். குடலிலும் வலியுண்டாகும். இவைகளே வாதகுன்மக் குறிகளாகும்.

வலிகுன்மக் குறிகள்

